திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, ஒரே எல்லைக்குள் இரண்டு சங்கங்கள் இருக்கலாம். அதற்கு பைலாவை திருத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு—அவ்வாறு பல சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்த வகையில் பைலாவை அமெண்ட் செய்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிச் சங்கம் அமைப்பதற்கு—அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இது ஒரே பஞ்சாயத்துக்குள்ளே வருகிறது. பஞ்சாயத்து என்பதே மிகக் குறுகிய ஒரு வட்டம்தான். அந்த வட்டத்திற்குள் இன்னொரு கூட்டுறவுச் சங்கம் துவங்குவது என்பது வியாபாரத்திற்கும் அவ்வளவு ஏற்றதாக இருக்காது என்பது என் கருத்து.

சத்துணவு மையம்.

153—(*வினா எண் 10635) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சத்துணவு மையத்திலாவது ஆதி திராவிடர் குழந்தைகளை தனித்து பிரித்து வைத்து உணவு வழங்கப்படுகிறதாக ஏதேனும் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள எந்தச் சத்துணவு மையத்திலும் இதுபோன்ற பிரச்சனை எழவில்லை.

உடல் ஊனமுற்றோருக்கு சத்துணவுக் கூடங்களில் பணிபுரிய முன்னுரிமை வழங்கல்.

154—(*வினா எண் 12195) திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்துணவுக் கூடங்களில் பணிபுரிவதற்கு உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற விதவைப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.